| 01 |
|---|

# பொருளியல்

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 12

## பொருளாதார முறைமையொன்றின் அடிப்படை.

## பகுதி 1

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

1. பொருளாதார அமைப்பின் ஒவ்வொரு அலகு, அதன் அமைப்பு மற்றும் நடத்தை ஆகியவற்றை பகுப்பாய்விற்கு உட்படுத்தும் பணி?
   (1) நியமப் பொருளாதாரம்
   (2) நேர் பொருளாதாரம்
   (3) சிற்றினப்பொருளாதாரம்
   (4) பேரினப் பொருளாதாரம்
   (5) சமூக விஞ்ஞானமாகும்.

2. பின்வரும் கூற்றுக்களில் நியமப்பொருளாதார கூற்றாக அமைவது?
   (1) கடந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி விகிதம் 1.5% ஆக காணப்பட்டது.
   (2) பொருளாதாரத்தில் வளர்ச்சியடைய அனைவருக்கும் மானியம் வழங்கப்பட வேண்டும்.
   (3) அருமை என்பது அனைத்து பொருளாதாரத்திற்கும் பொதுவான ஓர் ஒன்றாகும்.
   (4) பொருளாதார வீழ்ச்சி காரணமாக இலங்கையின் தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது.
   (5) விவசாயிகளின் வருமானத்தை உறுதிப்படுத்த அரசு உத்தரவாத விலை முறையை கடைபிடிக்க வேண்டும்.

3. பின்வருவனவற்றில் எது நுண்பொருளியல் கூற்றாக கருதப்படும்?
   (1) வர்த்தக மீதியை மேம்படுத்துதல்.
   (2) பொது விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றம்.
   (3) தலா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகரிப்பு
   (4) வேலை வாய்ப்பு மட்டத்தை அதிகரித்தல்.
   (5) ஒரு வணிக நிறுவனத்தின் இலாபத்தை அதிகப்படுத்தும் உற்பத்தி மட்டம்.

4. பின்வரும் கூற்றுக்களில் எது இலவசப் பண்டங்களின் சிறப்பியல்பாகும்?
   (1) அப் பண்டத்தை வழங்குவதற்கு அமையச் செலவு ஏற்டாது.
   (2) சமூக நலனுக்காக அப் பண்டம் அரசு மூலம் நிரம்பல் செய்யப்படல்.
   (3) கேள்வி பூரண நெகிழ்வுத் தன்மை உடையது.
   (4) அப் பண்டத்தின் உற்பத்தி குறைந்து செல்லும் எல்லை விளைவு விதிக்கு உட்பட்டது.
   (5) அப் பண்டத்தின் நுகர்விற்கு விலை செலுத்தப்பட வேண்டும்.


5. பூச்சிய விலையில் எல்லையற்ற நிரம்பலை கொண்ட ஒரு வளத்திற்கு உதாரணமாக அமைவது?
   (1) கடலில் உள்ள மீன்
   (2) சூரிய ஒளி
   (3) போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர்
   (4) பயிரிடப்பட்ட நிலம்
   (5) இயற்கை காடு

6. பின்வருவனவற்றில் பொருளியலில் மூலதன முதலீடாக கருதப்படாதது?
   (1) பயன்படுத்தப்பட்ட கார் ஒன்று கொள்வனவு செய்யப்படல்.
   (2) இயந்திரங்கள் உற்பத்தி
   (3) துறைமுக கட்டுமானம்
   (4) நெடுஞ்சாலை கட்டுமானம்
   (5) மூலப்பொருட்களின் கையிருப்பு அதிகரித்தல்.

7. வளங்களின் அருமை மற்றும் அவற்றின் மாற்றுப்பயன்பாட்டு காணப்படும் போது அதனால் பொருளாதாரத்தில் ஏற்படும் விளைவாக அமைவது.
   (1) தெரிவுப்பிரச்சினை தோன்றல்
   (2) பொருளாதாரத்தில் வினைத்திறனின்மை தோற்றம் பெறல்
   (3) மாறா அமையச்செலவு தோற்றம் பெறல்
   (4) பொருளாதார வளர்ச்சி ஏற்படுதல்
   (5) அதிகரித்து செல்லும் அமையச்செலவு தோற்றம் பெறல்.

8. பொருளாதாரத்தில் உள்ள வளங்கள் சாத்தியமான வெளியீட்டு மட்டத்தை விட குறைந்த மட்டத்தில் பயன்படுத்தப்பட்டால் பொருளாதாரத்தின் வெளியீட்டின் அமையச்செலவு ?
   (1) நிலையாக இருத்தல்
   (2) பூச்சியமாகும்.
   (3) அதிகரித்து செல்லும் அமையச்செலவு தோற்றம் பெறல்
   (4) குறைந்து செல்லும் அமையச்செலவு தோற்றம் பெறல்
   (5) விகிதாசாரமாக அதிகரிக்கும் தன்மை காணப்படல்.

9.




ஷஅருகில் உள்ள உற்பத்தி சாத்திய வளைவில் உற்பத்தி புள்ளி A இலிருந்து B க்கு நகரும் போது யாது நிகழும்?
   (1) இரு உற்பத்தியிலும் அமையச்செலவு தோன்றாது.
   (2) x பண்டத்தின் உற்பத்தி அதிகரிக்கும்.
   (3) y பண்டத்தின் உற்பத்தி அதிகரிக்கும்.
   (4) இரண்டு உற்பத்தியிலும் அமையச்செலவு தோன்றும்.
   (5) y பண்ட உற்பத்திற்காக x பண்ட உற்பத்தியை இழக்க நேரிடும்.

10. உற்பத்திகாரணிகளின் உற்பத்தி திறனாக அழைக்கப்படுவது எது?
    (1) காரணிகளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மொத்த வெளியீடு ஆகும்.
    (2) உற்பத்தி காரணியின் சராசரி வெளியீடு ஆகும்.
    (3) உற்பத்தி காரணியின் குறைந்தபட்ச வெளியீடு ஆகும்.
    (4) உற்பத்தி காரணியின் எல்லை உற்பத்தி திறன் ஆகும்
    (5) உற்பத்தி காரணியின் எல்லைச் செலவு ஆகும்.

11. உற்பத்தி சாத்திய எல்லையில்
    (1) குறைதொழில் மட்டம் மற்றும் வளப்பற்றாக்குறை
    (2) பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தி
    (3) வள அருமை அதிகப்பட்ட உற்பத்தி திறன் மற்றும் மாற்றுப்பயன்பாடு
    (4) அமையச்செலவு மற்றும் வளங்களை குறைத்து பயன்படுத்தல்.
    (5) குறைதொழில் மட்டம் மற்றும் வளப்பயன்பாடு மற்றும் வேலையின்மை

12. உற்பத்தி காரணியாக மூலதனமாக கருதப்படுவது?
    (1) உற்பத்திக்கு செயற்பாட்டிற்கு உதவும் காரணியாக
    (2) இறுதி நுகர்வுக்கு பயன்னபடுத்தப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள்
    (3) உற்பத்தித்திறன் கொண்ட வளமாக
    (4) அதிகரித்துச் செல்லும் அமையச்செலவின் கீழ் பயன்படுத்தப்படும் வளமாக இருத்தல்.
    (5) உற்பத்திகளை கொள்வனவு செய்ய பயன்படுத்தப்படும் வளமாகும்.

13. சுதந்திர சந்தை பொருளாதார அமைப்பின் அடிப்படை பண்பு?
    (1) அரச தலையீடுகள் மிக அதிகம்
    (2) தனியார் சொத்து உரிமை அமைப்பு
    (3) அடிப்படை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மையப்படுத்தப்பட்ட திட்டமிடலின் பயன்பாடாகும்.
    (4) விலை மற்றும் ஊதியங்கள் அரசினால் தீர்மானிக்கப்படுகின்றது.
    (5) வளங்கள் பொதுவான உரிமை.

14. திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தின் முக்கிய அம்சமாக அமைவது?
    (1) பொருளாதாரத்தில் தீர்மானம் மையப்படுத்தப்பட்டதாகும்.
    (2) ஆரசின் செயற்பாடு மட்டுப்பத்தப்பட்டுள்ளது.
    (3) செல்வம் மற்றும் வருமானம் சமமற்ற விகிதத்தில் பகிரப்படுதல்.
    (4) விலைப்பொறிமுறை பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழிகாட்டுகிறது.
    (5) பொருளாதாரத்தினுள் அதிக போட்டி தன்மை ஏற்படுத்தல்.

15. சந்தை பொருளாதாரத்தின் விலையின் தொழிற்பாடாக அமைவது?
    (1) பங்கீடு செய்தல் மற்றும் உற்பத்திதிறன் அதிகரித்தல்
    (2) ஊக்குவிப்புக்களை வழங்குதல் மற்றும் உற்பத்தி திறன் அதிகரிப்பு
    (3) ஊக்குவிப்புக்களை வழங்குதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தல்.
    (4) சமிஞ்சைகளை வழங்குதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தல்.
    (5) சமிஞ்சைகளை வழங்குதல் மற்றும் பங்கீடு செய்தல்.

16. ஒரு பொருளாதாரத்தினுள் அரசின் செயற்பாடு உயர்மட்டத்தில் காணப்படுவதனால் அப் பொருவாதாரம் பற்றிய சரியான கூற்று எது?
    (1) கட்டளைப் பொருளாதாரமாக அமைதல்
    (2) சற்தைப் பொருளாதாரமாக அமைதல்
    (3) முதலாளித்துவ பொருளாதாரமாக அமைதல்
    (4) கலாசார பொருளாதாரமாக அமைதல்
    (5) சமூக சந்தை பொருளாதாரமாக அமைதல்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

17. கலப்பு பொருளாதாரம் தொடர்பாக நீர் உடன்படாத கூற்று?
   (1) அரசு மற்றும் தனியார் துறை ஆகிய இரு துறைகளுக்கும் வள உரிமையை கொண்டுள்ளது.
   (2) விலை அமைப்பு மற்றும் திட்டமிடல் முறை இரண்டும் காணப்படுதல்.
   (3) தனியார் துறை விலை மூலம் ஊக்குவிப்புக்களை பெறுதல்
   (4) அரச பொருளாதார செயற்பாடுகள் எவ்வித தலையீடு இன்றி இருத்தல்.
   (5) அரச தனியார் துறையிடம் வரி அறவிடுதல்.

18. தனிப்பட்ட சுதந்திரத்தை ஓரளவு கட்டுப்படுத்தும் அதே சமயம் சமூக நீதியை உறுதி செய்யும் வகையில் அரசு செயற்படும் சந்தைப் பொருளாதார அமைப்பை எவ்வாறு அழைக்கலாம்?
   (1) முதலாளித்துவப் பொருளாதாரமாக அமைதல்
   (2) ஒரு சோசலிக பொருளாதாரமாக அமைதல்
   (3) கலப்பு பொருளாதாரமாக அமைதல்
   (4) சமூக சந்தைப் பொருளாதாரமாக அமைதல்
   (5) திட்டமிடப்பட்ட பொருளாதாரமாக அமைதல்

19. ஒரு பொருளாதாரம் உற்பத்தி வினைத்திறனை நோக்கி நுகர்வதை குறித்துக் காட்டும் கூற்று எது?
   (1) ஊற்பத்தி சாத்திய வளையின் மீது காணப்படும் ஒரு புள்ளி
   (2) அதிகரிக்கும் அமையச்செலவு நிலைமைக்கு முகம் கொடுத்தல்.
   (3) நிலையான அமையச்செலவு நிலைமைக்கு முகம் கொடுத்தல்.
   (4) குறைதொழில்மட்ட நிலமையின் போதும் சமூக தேவைக்கு ஏற்ப உற்பத்தியை செய்வதன் மூலம்
   (5) நிறைதொழில் மட்டத்தில் தொழிற்படல்.

20. பொருளாதார செயற்திறனை அளவிடப் பயன்படுத்தப்படும் நியதிகளாவன?
   (1) வள பற்றாக்குறை மற்றும் மாற்றுபயோகம்
   (2) பொருளாதார வினைத்திறன் மற்றும் குறையும் அமையச்செலவு
   (3) வெளியக உறுதி மற்றும் பொருளாதார வளர்ச்சி
   (4) உள்ளக உறுதி மற்றும் அமையச் செலவு
   (5) பூரண வேலைவாய்ப்பு மற்றும் அமையச் செலவு

COMMERCE & BUSINESS STUDIES BRANCH